



**அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில்**
**வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை**

| | |
|---|---|
| **வெளியீடு** | **ஐக்கிய அரபு அமிரக அரசின்**<br>**இஸ்லாமிய விவகார துறை**<br>(http://www.awqaf.gov.ae) |

**வெள்ளிக்கிழமை ரஜப் பிறை 15 ஹிஜ்ரி 1437**
Friday of Rajab 15th Hijri 1437
22nd April 2016

| | |
|---|---|
| **தலைப்பு:** | **சுயக் கட்டுப்பாடு!** |



| | |
|---|---|
| **தமிழில்** | **மௌலவி, அப்சலுள் உலமா**<br>**புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.**<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | சுயக் கட்டுப்பாடு! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த முறையில் பக்குவப்படுத்துகிறான். ஆத்மாக்களை படைத்து அவற்றை ஒழுங்கு படுத்தியுள்ளான். அந்த ஆத்மாவிற்கு நன்மை எது? தீமை எது? என்று அதன் ஆழ்மனதில் உதிக்க வைக்கிறான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(2:281)

وَاتَّقُوا يَوْمًا تُرْجَعُونَ فِيهِ إِلَى اللَّهِ ثُمَّ تُوَفَّى كُلُّ نَفْسٍ مَا كَسَبَتْ وَهُمْ لاَ يُظْلَمُونَ

"மேலும், ஒரு நாளை பற்றிப் பயப்படுங்கள். அந்நாளில் நீங்கள் (அனைவரும்) அல்லாஹ்விடம் கொண்டு வரப்படுவீர்கள். ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அவைகள் செய்த செயல்களுக்கு முழுமையாகக் (கூலி) கொடுக்கப்படும். அன்றி, அவர்கள் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள்"

**முஸ்லிம்களே**! அல்லாஹ் தஆலா மனித இனத்தை படைத்து அவனுக்கு போதிய அறிவையும் வழங்கியுள்ளான். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஓர் ஆத்மாவை வைத்துள்ளான். அந்த ஆத்மாவிற்கு தேவையான நேரான பாதையை ஆழ்மனதில் உதிக்கச் செய்கிறான். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (91:7)

وَنَفْسٍ وَمَا سَوَّاهَا

"ஆத்மாவின் மீதும், அதை ஒழுங்குபடுத்தியவன் மீதும் சத்தியமாக"



www.sunnathwaljamath.com

அதாவது, 'இயல்பாகவே மிக உறுதியான வழியை நோக்கி நிலைப் பெறும் விதமாக அந்த ஆத்மாவை இறைவன் அமைத்துள்ளான்' (411/8 : تفسير ابن كثير)

நன்மையை தூண்டும் விதமாகவும், தீமையை கண்டு விலகிக் கொள்ளும் விதமாகவும் இந்த ஆத்மாவின் உள்ளுணர்வை அல்லாஹ் ஏற்படுத்தி வைத்திருக்கிறான். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (91:8)

فَأَلْهَمَهَا فُجُورَهَا وَتَقْوَاهَا

"அதன் நன்மை தீமைகளை அதற்கறிவித்தவன் மீதும் சத்தியமாக!"

"அதாவது, நன்மை எது? தீமை எது? என்று உள்ளுணர்வின் மூலமாகவே அந்த ஆத்மாவிற்கு அல்லாஹ் மிக தெளிவாக்கி கொடுக்கிறான் என்பது இதன் பொருளாகும்" என்று இந்த வசனத்திற்கு இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுு அன்ஹுமா அவர்கள் விளக்கம் கூறுகிறார்கள். (412/8 : تفسير ابن كثير)

எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (90:10)

وَهَدَيْنَاهُ النَّجْدَيْنِ

"அன்றி, (நன்மை தீமையின்) இரு வழிகளையும் நாம் அவனுக்குப் பிரித்தறிவித்தோம்;"

அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டு அந்த ஆத்மாவை தூய்மைப்படுத்திய பிறகு அழகிய நற்குணங்களால் அதனை யார் ஒழுங்குபடுத்தி வைத்திருக்கிறாரோ நிச்சயம் அவர் வெற்றி பெறுகிறார். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (91:9)

قَدْ أَفْلَحَ مَنْ زَكَّاهَا

"எவன் (பாவங்களை விட்டும் தன் ஆத்மாவைப்) பரிசுத்தமாக்கிக் கொண்டானோ அவன், நிச்சயமாக வெற்றியடைந்து விட்டான்"

ஆனால் அப்படி செய்யாமல் பாவங்களிலேயே மூழ்கி ஆத்மாவை யார் மிகவும் மோசமாக வைத்துக் கொண்டிருக்கிறாரோ நிச்சயம் மோசமான இழப்பையே பெறுவார். இதனைப் பற்றி இறைவன் கூறுகிறான்: (91:10)

وَقَدْ خَابَ مَنْ دَسَّاهَا

"எவன் அதனைப் (பாவத்தில்) புதைத்து விட்டானோ அவன், நிச்சயமாக நஷ்டமடைந்துவிட்டான்"

எனவே யார் தனது ஆத்மாவை தூய்மைப்படுத்தி, அனுதினமும் ஒழுக்கமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வழமையான நல்லொழுக்க பயிற்சிகளை கொடுத்து, இறையச்சத்தை கடைபிடிக்கும் முயற்சியை மேற்கொண்டு வருகிறாரோ நிச்சயம் அவர் பாராட்டுதலுக்குரியவர். இத்தகையவர் தனது ஆத்மாவை நேரான பாதையை நோக்கியே

நிலைப்படுத்தி வைத்திருப்பார், சுய விருப்பு வெறுப்பு, மனோ இச்சையை விட்டு தூரமாக தனது ஆத்மாவை வைத்திருப்பார்.

"பேராசை கொள்வது, கோபம் கொள்வது, மனோ இச்சை கொள்வது போன்றவற்றை விட்டு விலகி யார் தம்மை தூய்மையாக வைத்துக் கொள்கிறாரோ நிச்சயம் அவர் வெற்றி பெறுவார்" என்று ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஸீஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள். (جامع العلوم والحكم ص: 147)

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (79:40-41)

وَأَمَّا مَنْ خَافَ مَقَامَ رَبِّهِ وَنَهَى النَّفْسَ عَنِ الْهَوَى* فَإِنَّ الْجَنَّةَ هِيَ الْمَأْوَى

"எவன் தன் இறைவனின் சந்நிதியில் (விசாரணைக்காக) நிற்பதைப் (பற்றிப்) பயந்து, (தப்பான) சரீர இச்சையை விட்டுத் தன்னைத் தடுத்துக்கொண்டானோ, அவன் செல்லுமிடம் நிச்சயமாகச் சுவனபதிதான்"

மனோ இச்சை என்றால் ஹலால் அல்லது ஹராம் என எதனையும் பேணி நடக்காமல் தான் தோன்றித்தனமாக வாழ்வதாகும். ஆனால் அல்லாஹ்விற்கு பயந்து நடக்கு ஓர் ஆத்மா, தன்னுடைய இறைவனுக்கு பயந்து, அவன் கூறிய விதத்தில் மிகவும் கவனமாகவும் பேணுதலோடு வாழும். மேலும் தன்னை மிக எளிதில் வீழ்ச்சியில் தள்ளக் கூடிய கோபம், பேராசை, போன்றவற்றை விட்டு விலகியும் அந்த ஆத்மா இருக்கும்.

இமாம் பூஸீரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், நபி புகழ் பாடும் தனது புர்தா ஷரீப் நூலில் பின்வரும் கவிதையை கூறுகிறார்கள்:

وَالنَّفْسُ كَالطِّفْلِ إِنْ تُهْمِلْهُ شَبَّ عَلَى

حُبِّ الرَّضَاعِ وَإِنْ تَفْطِمْهُ يَنْفَطِمِ

"மனம் என்பது ஒரு குழந்தையை போன்றது. குழந்தையை அப்படியே விட்டுவிட்டால் அது பால்குடி பிரியத்திலேயே வளர்ந்து வாலிபனாகி விடும். அதற்கு நீ பால் குடியை மறக்க வைத்தால் அது தானாக மறந்து விடும்"

**அல்லாஹ்வின் அடியார்களே**! நமது நேர்மையான ஷரீஅத் கட்டமைப்பு சுயக் கட்டுப்பாட்டை அதிகம் வலியுறுத்துகிறது. மனதை கடிவாளம் போட்டு கட்டுப்படுத்த வேண்டும் என்கிறது. அடக்க வேண்டிய முறையில் மனதை மிக நேர்த்தியாகவும், வலிமையாகவும் அடக்கி வைக்க வேண்டும்.

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:



www.sunnathwaljamath.com

مَا تَجَرَّعَ عَبْدٌ جُرْعَةً أَفْضَلَ عِنْدَ اللَّهِ عَزَّ وَجَلَّ مِنْ جُرْعَةِ غَيْظٍ، يَكْظِمُهَا ابْتِغَاءَ وَجْهِ اللَّهِ تَعَالَى

"அல்லாஹ் தஆலாவின் திருப்பொருத்தம் ஒன்றை மட்டுமே நாடி ஒருவர் கட்டுக்கடங்காத கோபத்தை அடக்கி விடுகிறார். இதனை விட சிறப்பான ஒன்றை அல்லாஹ்விற்காக ஓர் அடியான் அடக்கியதாக இருக்க மாட்டான்" (6114 : أحمد)

ஆம் இது ஒவ்வொரு தனி மனிதனுக்குள்ளும் இறக்க வேண்டிய உள்ளார்ந்த வீரமாகும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

لَيْسَ الشَّدِيدُ بِالصُّرَعَةِ، إِنَّمَا الشَّدِيدُ الَّذِي يَمْلِكُ نَفْسَهُ عِنْدَ الْغَضَبِ

"மக்களைத் தன்னுடைய பலத்தால் அதிகமாக அடித்து வீழ்த்துபவன் வீரன் இல்லை, உண்மையில் வீரன் என்பவன், கோபத்தின்போது தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்பவனே ஆவான்" (متفق عليه)

கட்டுக்கடங்காத கோபம் ஏற்படும் போது உண்மையான வீரன் அவற்றை அடக்கி வென்று விடுவான். இயல்பு நிலைக்கு திரும்பும் வரை நிதானத்தை இழக்காமல் மிகவும் பொறுமையாக இருப்பான். இப்படிப்பட்டவனுக்கு மிகவும் அதிகமான கூலியும், கண்ணியமான கௌரவமும் கிடைக்கும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ كَظَمَ غَيظاً، وَهُوَ قَادِرٌ عَلَى أَنْ يُنْفِذَهُ، دَعَاهُ اللَّهُ سُبحَانَهُ عَلَى رُؤُوسِ الخَلاَئِقِ يَومَ القِيامَةِ حَتَّى يُخَيِّرَهُ مِنَ الْحُورِ الْعِينِ مَا شَاءَ

"ஒருவர் கோபத்தை விழுங்கி விடுகிறார், அதே சமயம் அந்த கோபத்தை வெளிப்படுத்தி அதிகாரம் செலுத்தும் ஆற்றல் நிறைந்தவராகவும் இருக்கிறார். (என்ற போதிலும் அவர் கோபத்தை அடக்கி விடுகிறார்). நாளை மறுமையில் பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் மற்ற படைப்புகளைக் காட்டிலும் இந்த அடியாரை முன்னிலைப்படுத்தி அழைக்கிறான். (அழைத்த பிறகு) ஹூருல் ஈன் எனும் கண்ணழகிகளில் யாரை பிடிக்குமோ அந்த அழகியை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்கிற விருப்பத்தை அந்த அடியாருக்கு இறைவன் வழங்குகிறான்" (2021 :والترمذي ، 4777 : أبو داود)

கோபத்தை விழுங்கி, மனதை கட்டுப்படுத்தி வைத்து, கோபத்தை முற்றிலும் விட்டொழித்து, நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அறிவுரைப்படி வாழ்ந்து வரும் ஓர் அடியான் நிச்சயம் பாக்கியம் நிறைந்தவர்.



www.sunnathwaljamath.com

فَعَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَّ رَجُلاً قَالَ لِلنَّبِيِّ صلى الله عليه و سلم: أَوْصِنِي. قَالَ:لاَ تَغْضَبْ. فَرَدَّدَ مِرَارًا، قَالَ:لاَ تَغْضَبْ

ஒரு மனிதர் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, "எனக்கு அறிவுரை கூறுங்கள்" என்றார். அதற்கு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "கோபம் கொள்ளாதே" என்று (அறிவுரை) கூறினார்கள். அவர் ('எனக்கு அறிவுரை கூறுங்கள்' எனப்) பல முறை கேட்டபோதும் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "கோபம் கொள்ளாதே" என்று மட்டுமே சொன்னார்கள். இந்த ஹதீஸை அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். (6116 : البخاري )

இவ்வாறு கோபத்தை அடக்கிக் கொண்டு, கோபத்தை மிக நேர்த்தியாக கையாண்டு, சுய கட்டுப்பாடுகளோடு இருப்பவர்களை அல்லாஹ் தனது திருமறைக் குர்ஆனில் புகழ்ந்து கூறுகிறான்: (3:134)

وَالْكَاظِمِينَ الْغَيْظَ وَالْعَافِينَ عَنِ النَّاسِ

"கோபத்தை விழுங்கி விடுவார்கள். மனிதர்(களின் குற்றங்)களை மன்னித்து விடுவார்கள்"

அதாவது, கட்டுக்கடங்காத கோபம் வந்தால் அவற்றை வெளிக்காட்டாமல் முற்றிலுமாக மறைத்து விடுவார்கள். அந்த கோபத்தின் விளைவை வெளியில் காட்ட மாட்டார்கள். தனக்கு பாதிப்பு ஏற்படுத்தியவர்களை மன்னித்து விடுவார்கள். ((119 /2) : تفسير ابن كثير)

சுய கட்டுப்பாடு கொள்வதினால் ஏற்படும் நன்மைகளை கருத்தில் கொண்டே சஹாபா பெருமக்கள் அதனை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்தனர். ஒரு மனிதர் ஸல்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வந்தார். "அப்துல்லாஹ்வின் தந்தையே எனக்கு நீங்கள் அறிவுரை கூறுங்கள்" என்று வேண்டுகோள் வைத்தார். அதற்கு இந்த சஹாபி, "நீ கோபம் கொள்ளாதே" என்று கூறினார்கள். மறுபடியும் அந்த மனிதர், "கோபம் கொள்ள வேண்டாம் என்று மட்டுமே எனக்கு உத்தரவிடுகிறீர்களா? ஆனால் எனக்கு கட்டுக்கடங்காத கோபம் வந்து விட்டால் (எனது கண் மற்றும் இதர உறுப்புகளை விட்டு) கோபம் என்னை முற்றிலும் மறைத்துவிடும்" என்று கூறினார். அதற்கு அந்த சஹாபி அவர்கள், "உனக்கு கோபம் வந்தால் உம்முடைய நாவையும், கைகளையும் நீ அடக்கி ஆள வேண்டும்" என்று தெளிவான முறையில் ஆலோசனை வழங்கினார்கள். (276 الصمت لابن أبي الدنيا ص)

இவ்வாறு நீண்ட நெடிய அறிவுரைகளை கேட்ட பிறகும் கோபத்தை நாம் அடக்காமல் விட்டுவிட்டால் அழிவை தரும் விளைவுகளை சந்திக்க நேரிடும். சொல்லாலும் செயலாலும் வெளிப்படும் கோபத்தினால் நிலையான வருத்தத்தை பெற்றுத்தரும் பாதிப்புகள் ஏற்படும்.

இரண்டு சகோதரர்களின் நிகழ்வைப் பற்றி சங்கை நிறைந்த திருக் குர்ஆன் நமக்கு எடுத்து கூறுகிறது. அவ்விருவரில் ஒருவர் அமைதியாகவும், நிதானமாகவும், தீமையை விட்டு விலகியும்

இருந்தார். ஆனால் மற்றொருவர் எப்போதும் கோபத்தோடும், பொறாமை எண்ணத்தோடும், தவறான சிந்தனைகளோடும் இருந்தார். இதனால் ஷைத்தானின் சூழ்ச்சி வலையில் எளிதில் சிக்கிக் கொண்டார். எனவே இறுதியில் மாபெரும் குற்றத்தை புரிந்து, பெரிய அளவில் பாதிக்கப்பட்டவராக ஆகி விட்டார். இதனைப் பற்றி இறைவன் கூறுகிறான்: (5:30)

فَطَوَّعَتْ لَهُ نَفْسُهُ قَتْلَ أَخِيهِ فَقَتَلَهُ فَأَصْبَحَ مِنَ الْخَاسِرِينَ

"(இதன் பின்னரும்) அவர் தன் சகோதரரை வெட்டி விடும்படியாக அவருடைய மனம் அவரைத் தூண்டவே, அவர் அவரை வெட்டிவிட்டார். அதனால் அவர் நஷ்டமடைந்தவரானார்"

தன்னுடைய சகோதரனை எப்படியாவது வீழ்த்தி விட வேண்டும் என்கிற கட்டுக்கடங்காத கோபமும், காழ்ப்புணர்ச்சியும் அவரை ஆட்கொண்டு விட்டது. இதனால் இம்மையிலும் மறுமையிலும் பெரும் நஷ்டவாளியாகி விட்டார். இதனால்தான் இமாம் ஹஸன் பஸரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: பின்வரும் நான்கு தன்மைகள் யாரிடம் இருக்கிறதோ நிச்சயம் அவரை அல்லாஹ் ஷைத்தானை விட்டு பாதுகாக்கிறான், நரகத்தை விட்டு அவரை விலக்கிவிடுகிறான். 1. ஆசை கொள்ளும் போதும், 2. வெறுக்கும் போதும், 3. மனோ இச்சை கொள்ளும் போதும், 4. கோபம் கொள்ளும்போதும் சுய கட்டுப்பாட்டோடு தன்னை தானே அடக்கி ஆளும் தன்மையாகும். அனைத்து விதமான தீமைகளுக்கும் இந்த நான்கு தன்மைகள்தான் தொடக்க புள்ளியாக இருக்கின்றன. (جامع العلوم والحكم ص: 368)

**தொழுகையாளிகளே**! சுய கட்டுப்பாடுகளை பெறுவதற்கான வழிகளில் சிலவற்றை நாம் கடைபிடிக்க வேண்டும். எனவே யாரிடமும் வாக்குவாதத்தில் ஈடுபடக் கூடாது, நோகடிக்கும் வார்த்தைகளை பேசாமல் இருக்க வேண்டும், மனம் நோகும் விதத்தில் மற்றவர்களை கேலி கிண்டல் செய்யக் கூடாது, மற்றவர்களை நக்கலடித்து நையாண்டி செய்து பேசக் கூடாது, மற்றவர்களைப் பற்றி பொய் பேசுவதும், அவர்களைப் பற்றி இல்லாதது பொல்லாததையும் பேசுவதும் கூடாது. நன்மையானவற்றை பேசுவதில் மட்டுமே நமது நாவுகளை ஈடுபடுத்த வேண்டும். இப்படி நாம் செய்வதால் ஷைத்தானின் சூழ்ச்சி வலையை முறியடிக்க முடியும். அவனுடைய செயல் திட்டங்களையும், கெடுக்கும் வழிகளையும் நாம் உடைத்தெறிய வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (17:53)

وَقُلْ لِعِبَادِي يَقُولُوا الَّتِي هِيَ أَحْسَنُ إِنَّ الشَّيْطَانَ يَنْزَغُ بَيْنَهُمْ إِنَّ الشَّيْطَانَ كَانَ لِلإِنْسَانِ عَدُوًّا مُبِينًا

"(நபியே! எனக்கு கட்டுப்பட்ட) என்னுடைய அடியார்களுக்கு நீங்கள் கூறுங்கள்: அவர்கள் (எந்த மனிதருடன் பேசியபோதிலும்) எது மிக அழகியதோ அதையே கூறவும். நிச்சயமாக ஷைத்தான் அவர்களுக்கிடையில் (கெட்ட வார்த்தைகளைக் கூறும்படி செய்து) கெடுதலே செய்வான். (ஏனென்றால்,) நிச்சயமாக ஷைத்தான் மனிதனுக்குப் பகிரங்கமான எதிரியாக இருக்கிறான். (ஆகவே, எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்)"

அதே சமயம் எந்நிலையிலும் பணிவு கொள்வது, சகித்துக் கொள்வது, மற்றவர்கள் மீது அக்கறை செலுத்துவது, அவர்களின் நலனில் ஈடுபாடு கொள்வது, அல்லாஹ் தஆலாவின்



www.sunnathwaljamath.com

ஆற்றலை உணர்ந்து கொள்வது, மனிதர்களுடைய உயர்வை விளங்குவது, ஒவ்வொருவரின் தனி மரியாதைகளை புரிந்து வைத்திருப்பது, என பல்வேறு நல்ல வழிகளில் நமது சுய ஆளுமைகளை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஓர் இறைஞானி கூறுகிறார்: யாரும் என்னிடம் வாக்கு வாதத்தில் ஈடுபட்டதில்லை. காரணம் என்னோடு சண்டையில் ஈடுபடுபவர் என்னை விட பலத்தில்/ஆற்றலில் மேலானவராக இருந்தால், அவருடைய மதிப்பை அறிந்து விலகி இருப்பேன். என்னை விட பலத்தில்/ஆற்றலில் குறைவானவராக இருந்தால், எனது பலத்தை காட்டாமல் ஒதுங்கிவிடுவேன். என்னோடு சண்டை போடுபவர் எனக்கு நிகரான பலத்தில்/ஆற்றலில் இருந்தால், என்னை விட அவரையே உயர்வாக கருதி பணிந்து போய் விடுவேன். இப்படிப்பட்ட மன நிலையில் நான் இருப்பதால் யாரிடமும் நான் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டதில்லை. ( سير أعلام النبلاء 43/5 وهو الأَحْنَفُ بن قيس)

நமக்கு பாதிப்பு ஏற்படுத்தியவரிடம் நாம் அழகிய முறையில் நடந்து கொள்வது மிகவும் உயரிய நற்குணமாகும். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (41:34)

ادْفَعْ بِالَّتِي هِيَ أَحْسَنُ فَإِذَا الَّذِي بَيْنَكَ وَبَيْنَهُ عَدَاوَةٌ كَأَنَّهُ وَلِيٌّ حَمِيمٌ

"நன்மையும் தீமையும் சமமாகிவிடாது. (ஆதலால், நபியே! தீமையை) நீங்கள் மிக அழகியதைக் கொண்டு தடுத்துக் கொள்ளுங்கள். அவ்வாறாயின், உங்களுடைய கொடிய எதிரியை அதே சமயத்தில் உங்களுடைய உண்மையான, மிக்க நெருங்கிய நண்பனைப் போல் காண்பீர்கள்"

சுய கட்டுப்பாடுகளோடு வாழ்வது, ஒழுக்கமான நடைமுறைகளை கடைபிடிப்பது, பொறுமை, நிதானம், சகிப்புத்தன்மை போன்றவற்றை வளர்த்துக் கொள்வது என பல்வேறு வழிகளில் ஆத்மாவை தூய்மையாக வைத்திருக்க நாம் முயற்சிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் ஒரு மனிதன் நியாயமான ஆளுமைத்திறனை பெற்றிடுவான். இறைவனுடைய கிருபைகளுக்கு தகுதி பெறுவான். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொல்படி வாழும் பாக்கியத்தை பெறுகிறான். இவ்வாறு நடப்பவருக்கு உயர்தரமான வாழ்வு அமையும், சீரான பழக்க வழக்கங்களை கொண்டிருப்பார். தன்னுடைய குடும்ப உறுப்பினர்கள், தோழர்கள், அலுவல் நண்பர்கள் என யாவரிடமும் இணக்கமான பாசத்தையும் நட்பையும் கொண்டிருப்பார். சமூக நல்லிணக்கத்தை அதிக அக்கறையோடு பேணி நடப்பார். மற்றவர்கள் மீது அன்பும், அக்கறையும், கொண்டிருப்பார். ஒவ்வொரு தனிமனிதன் மீதும், சமூகத்தின் மீதும் உண்மையான பாசம் வைத்திருப்பார்.

யா அல்லாஹ்! எங்கள் ஆத்மாக்களுக்கு நீ இறையச்சத்தை தந்தருள்வாயாக!! எங்கள் ஆத்மாக்களை நீ தூய்மைப் படுத்துவாயாக!!! தூய்மைப் படுத்துவதில் நீயே சிறந்தவன்.

**கவனமாக கேளுங்கள்**: இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது.



www.sunnathwaljamath.com

**தொழுகையாளிகளே**! சுய கட்டுப்பாடுகளோடு வாழ்வதால் எண்ணற்ற பல நன்மைகள் கிடைக்கும். பல்வேறு வகையான சிறப்பும் கிடைக்கும். சுய ஆளுமைகளை வளர்த்துக் கொள்வதால் உண்மையான அறிவு, தொலை நோக்கு சிந்தனை, பரந்த மனப்பான்மை, தெளிவான பார்வை போன்ற நன்மையான வளர்ச்சிகள் ஏற்படும்.

ஹஜ்ரத் முஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு மனிதன் தான் அறியாதவற்றைப் பற்றி மிகவும் நிதானமாக சகிப்புத்தன்மையோடு இருக்கும் போதுதான் அவனுடைய அறிவு வளர்ச்சி குறிப்பிட்ட இலக்கை அடைந்து விட்டதாக கருத முடியும்.

ஓர் அரபு தத்துவ ஞானியிடம், "ஆண்களில் வீரமுள்ளவர் யார்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "யார் தன்னுடைய அறியாமையை உணர்ந்து சகிப்புத்தன்மையோடு இருக்கிறாரோ அவர்தான்" என்று பதில் தந்தார். (القائل هو: عمرو بن الأهتم)

ஒவ்வொரு தனிமனிதனும் சுயக் கட்டுப்பாடு கொண்டிருப்பதால் மொத்த சமூகத்திற்கும் அதன் நன்மை கிடைக்கிறது. அன்பும், அக்கறையும், பாசமும், தியாக உணர்வும், சேவை மனப்பான்மையும் வளர்கிறது. எனவே நாமும் நமது ஆளுமைத்திறனை வளர்ப்பதற்காக சுய கட்டுப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். நம்முடைய சொல் மற்றும் செயலினால் கடைசியில் ஏற்படும் விளைவுகளை முன்கூட்டியே யோசனை செய்த பிறகே நாம் பேசவோ செயல்படவோ வேண்டும்.

எனவே வார்த்தைகளை அடக்கம் எனும் தராசில் அளந்து பேச வேண்டும். நமது ஒவ்வொரு அணுகுமுறையினாலும் மற்றவர்களுக்கு எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படாதவாறு மிக கவனமாக செயல்பட வேண்டும். எல்லாம் முடிந்த பிறகு யாருடைய மனதிலும் கோபத்தையோ, வார்த்தை சண்டைகளையோ, ஆர்த்தமற்ற விவாதங்களையோ உருவாக்கி விடக் கூடாது. எனவே நன்மையானவற்றை மட்டுமே பேச வேண்டும். அல்லது முடிந்த வரை அமைதியாக இருந்து விட வேண்டும். நம்மை ஒருவர் பார்த்தால் அமைதி ஊற வேண்டும், நம்மிடம் பழகினால் அவருக்கு ஆன்மீகம் ஊற வேண்டும்.

"நீ நன்மையான பேச்சை (மட்டுமே) பேசு அதன் மூலம் நீ பல பாக்கியங்களை பெறுவாய். அப்படி பேச முடியாவிட்டால் அமைதியாக இருந்து விடு அதன் மூலம் நீ நிம்மதியாக இருப்பாய்" என்று ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகிறார்கள். (140/1 الزهد لوكيع)

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم



www.sunnathwaljamath.com

“ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**



www.sunnathwaljamath.com

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.
யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக

மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).



www.sunnathwaljamath.com